## 8.60 பொதுப் பணிகள்–பேரூராட்சிகள் துறை–தமிழ்நாடு அமைச்சுப் பணி இளநிலை உதவியாளர், வரித்தண்டலர் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் மற்றும் தட்டச்சர் ஆகிய பணியிடங்களில் பணிபுரியும் பணியாளர்களை பணி மாறுதல் மூலம் நியமனம் செய்ய தேர்ந்த பெயர் பட்டியல் அரசின் வழி தேர்வாணையத்திற்கு அனுப்புதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச் செயலகம், சென்னை 600 009

க.எண் 12467/பேரூ2/99–2 நாள் : 22.03.1999

அனுப்புநர்
திருமதி எஸ் மாலதி,இ.ஆ.ப.,
அரசு செயலர்,

பெறுநர்
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை 108
ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை 15
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநர், சென்னை 108
அனைத்து மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர்
மாநில கணக்காயர், சென்னை 35
செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,சென்னை 2

அய்யா,

பொருள் : பொதுப் பணிகள்–பேரூராட்சிகள் துறை–தமிழ்நாடு அமைச்சுப் பணி இளநிலை உதவியாளர், வரித்தண்டலர், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் மற்றும் தட்டச்சர் ஆகிய பணியிடங்களில் பணிபுரியும் பணியாளர்களை பணி மாறுதல் மூலம் நியமனம் செய்ய தேர்ந்த பெயர் பட்டியல் அரசின் வழி தேர்வாணையத்திற்கு அனுப்புதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன

பார்வை : 1. அரசாணை (நிலை) எண் 150 ந.நி.ம.கு.வ.துறை நாள் 19.8.98
2. அரசு கடித எண் 37790/பேரூ2/98–2 நாள் 22.3.99
3. செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண் 1982/சிடிபி /99 நாள் 8.4.99

அரசாணை எண் 150 ந.நி.ம.கு.வ.துறை நாள் 19.8.98ற்கு கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது.

மேற்படி அரசாணையில் பத்தி 4ல் உட்பத்தி (14)க்கு பதிலாக கீழ்க்கண்டவற்றை மாற்றீடு செய்து கொள்ளப்பட வேண்டும்

(14) ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31ம தேதிக்கு முன்னர் இதுபோன்ற தேர்ந்த பட்டியல் (வெற்றறிக்கை உட்பட) பேரூராட்சிகள் இயக்குநர் மற்றும் அரசு வழியாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு அனுப்பபப்பட வேண்டும். அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் 28ம் தேதிக்கு முன்பாக தேர்வாணையம் தனது ஒப்புதலை வழங்கும். தேர்வாணையத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தேர்ந்த பட்டியல் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரால் வெளியிடப்படும்.

தங்கள் நம்பிக்கையுள்ள,
ஒம்/–
அரசு செயலருக்காக